மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 30 ந உ காலை 10 மணிக்குக் காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1950 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ந் தேதிக்கு முன்னர் மேலே சொல்லப்பட்ட பிரகாரம் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக் காரர் மூலமாய் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். இச் சம்பந்தமாக உறுதி களோ எழுத்துகளோ உம்மிடம் இருக்குமின் விசாரணையன்று என்முன் வந்துகாட்ட வேண்டும். கணேகொட கிழக்கு கிராமத் தலைவர் கந்தோரில் பட நொ. A 1681 பார்க்கமுடியும்.

ஜே. எஸ். பிறணாண்டு,
காலி டிஸ்திறிக் காணி எடுக்கும்
உத்தியோகத்தர்.

காலிக் கச்சேரி,
1958 ம் ஆண்டு ஜூலை மீ 15 ந உ.

---

LA. 1123.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின் படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிக் காரியாதிகாரியின் பிரிவு, பருத்தித்துறைப் பட்டின சபைக்குட்பட்டிருக்கும் இரண்டாம் வட்டாரம், கோர்ட் றோட்டிலுள்ள 12 ம் இலக்க இறை வரி இலக்கத்தையுடையதும் றூ. 1, பே. 10.4 விஸ்தீரணமுடையதும் தில்லை நின்றதேனி எனப் பெயர் கொண்டதுமான காணி முழுவதும், இது விசேஷமாக பிரதம பட இலக்கம் ஏ. 2118 ல் 1 ம் துண்டென விவரிக்கப்பட்டுள்ளது.

இதன் உரிமையாளர் :

பருத்தித்துறை சித்தி விநாயகர் கோவில் தர்ம கர்த்தா :—திரு. எஸ். கதிர்காமத்தம்பி, காட்டுக் கந்தோர் கிளைக் காரியாலயம், மட்டக் களப்பு.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லதுமுறைப் படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1958 ம் ஆண்டு ஆவணிமாதம் 29 ந் தேதி காலை 10.30 மணிக்கு பருத்தித்துறை வாடிவீட் டில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 15 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏ. சீ. மூர்த்தி,
உதவி டிஸ்திறிக் அரசாட்சி ஏசண்டு.

யாழ்ப்பாணம் கச்சேரி,
1958 ம் ஆண்டு ஆடி மீ 14 ந உ.

---

L. A. 3609.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விவரம் :—
பிரதமப்பட இலக்கம்.—A 1520.
கிராமம் —ஆண்டிமுனை.

துண்டு : 1.

காணியின் பெயர் : ஆண்டிமுனைத்தோட்டம். விபரம் : 13 ஓலைக் கொட்டில்கள், தண்ணீர்க் குளிகள் உள்ள உபயோகமற்ற காணியும், 40 வருடத்திற்கு மேற்பட்ட தென்னந் தோட்டம். உரித்தாளியின் பெயர் : சிலாபம், பிரிஜ் வீதியிலுள்ள எல். கதிர்காமன்பிள்ளை ; சிலாபத்திலுள்ள என். சோமலிங்கம் ; பத்துளு ஓயா ஈரியன் கல்வியிலுள்ள ஏ. கெ. எஸ். செல்லகாளியம்மா ; உடப்பு ஆண்டி முனையிலிருக்கும் எம். நல்ல வயிரட்ட, ஆர். ராமச்சந்திரமூர்த்தி, என. தீச்சான்ந்தமூர்த்தி உடப்பிலிருக்கும் என். பொன்னம்பலம், திருமதி முத்துக்காமாட்சி, எம். முத்துராமன், என். செல்லியம்மா, கே. முத்துநதம்பி, எஸ். தெலியம்பலம், எஸ். கலமுத்து, எஸ். வைராபபன், எஸ். வைரையா என். ஆண்டியப்பன், என். வைரனுதன். விசாலம் : ஏ. 109, றூ. 1, பே. 32

துண்டு : 2.

காணியின் பெயர் : ஆண்டிமுனைத் தோட்டம். விபரம் : 20 ஓலைக் கொட்டில்கள், கற்களால் கட்டப்பட்ட இரண்டு கிணறுகள் தண்ணீர் குளிகள் உள்ள உபயோகமற்ற காணி, 40 வருடத்திற்கு மேற்பட்ட தென்னந் தோட்டம். உரித்தாளியின் பெயர் : உடப்பு ஆண்டி முனையிலிருக்கும் ஆர். முத்துவைரட்ன, ஆர். நல்லவைரட்ன, எம். நல்லவைரட்ன, எம். ராமச்சன்றமூர்த்தி, என். தெச்சானமூர்த்தி, உடப்புவையிலிருக்கும் ஏ. கே. கண்ணுச்சிமுத்து, ஈ. முநதுக்கண்ணுச்சி, ஈ. ஐயாத்துரை, கே. மரியாய், ஏ. பெருமால்மமாமுத்து, ஏ. பெருமாலாம்மாலாச்சி, கே. ரக்காயி, எஸ் புடபபன, எஸ். அண்ணுகுராளி, எஸ். கமலமுத்து, எல. தெய்யானகி, என். ஆண்டயப்பன், என். செல்லியம்மாவும், என். வைரவனுதனும். விசாலம் : ஏ. 55, றூ. 0., பே. 32. மொத்தம் : ஏ. 164, றூ. 2, பே. 24.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 1958 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 15 ந் தேதி காலை 10 மணிக்கு வாடிவீடு பத்துளுஓயாவில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களை யும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1958 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 8 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏ. எஸ். நவரத்னராசா,
டிஸ்திறிக் அரசாட்சி ஏசண்டு.

புத்தளச்சேரி,
1958 ம் ஆண்டு ஆடி மீ 15 ந உ.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

பிரதமப் படத்தின் இலக்கம் : A. 1512.

கிராமம்—கட்டுக்கெந்த கிழக்கு.

துண்டு 1 :

காணியின் பெயர் : மாவத்த தோட்டம். விபரம் : ஓலையால் வேய்ந்த கூரையும், கற்சுவர்கள் கொண்ட 3 நிரந்தரமான பேலி வீடுகளும், ஓலையால் வேய்ந்த மண்சுவர்கள் அடங்கிய 2 தற்காலிகமான வீடுகளும் (குசினிகள்), கிண்டிய கிணறும், ஒரு கற்களால் கட்டப்பட்ட கிணறும், 40 வருடத்திற்கு மேற்பட்ட தென்னங் காணி. உரித்தாளியின் பெயர் : சிலோன் டீ பிலான்டேஷன்ஸ் கொம்பனி லிமிட்டட், நுவரேலியா. விசாலம் : ஏ. 24, று. 2, பே. 22.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1958 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 17 ந் தேதி காலை 11 மணிக்கு புத்தளம் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1958 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 10 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் மும்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

ஏ. எஸ். நவரத்னராசா,
டிஸ்திறிக் அரசாட்சி ஏசண்டு.

புத்தளம் கச்சேரி,
1958 ம் ஆண்டு ஆடி மீ 18 ந் உ.

---

இல. LA. 3602.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்க காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின் படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

பிரதமபடம் இல. A. 1,524. கிராமம்—நாவற்காடு,

உப்புதளுவ.

துண்டு : 1.

காணியின் பெயர் : கமக்காரன் தோட்டம் ; விபரம் : கல் கிணறும், ஒரு தற்காலிக வீடும், தண்ணீர், ஊற்றும், சிதறுக வளர்ந்த சில தென்னை மரங்களும் கொண்ட பறட்டைக்காடு உடைய 40 வருஷ தென்னந் தோட்டம் ; உரித்தாளியின் பெயர் : எஸ். பீ. எல். சுப்பையா செட்டியார், காரைக்குடி, தென் இந்தியா ; விசாலம் : ஏ. 26, று. 1, ப. 06.

துண்டு : 2.

காணியின் பெயர் : கமக்காரன் தோட்டம் ; விபரம் : 9 மரங்கள் கொண்ட 40 வருஷ தென்னந் தோட்டமும், பெரிய தண்ணீர் ஊற்றும், இங்கும் அங்குமாய் வளர்ந்த தென்னை மரங்கள் கொண்ட பறட்டைக்காடு ; உரித்தாளியின் பெயர் : எஸ். பீ. எல். சுப்பையா செட்டியார், காரைக்குடி, தென் இந்தியா ; விசாலம் : ஏ. 24, று.0, ப. 33 ; மொத்தம் : ஏ. 50, று. 1, ப. 39.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியகாரர்மூலமாக 1958 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 17 ந் தேதி காலை 11 மணிக்கு புத்தளம் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1958 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் மும்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப் கின்றனர்.

ஏ. எஸ். நவரத்தினராசா,
டிஸ்திறிக் அரசாட்சி ஏசண்டு.

புத்தளம் கச்சேரி,
1958 ம் ஆண்டு ஆடிமீ 19 ந் உ.

# நானாவித அறிவித்தல்கள்

**1948 ம் ஆண்டின் முடிக்குரிய காணிப்பிரமாணங்களின் 21 (2) ம் பிரமாணத்தின் கீழ் அறிவித்தல்**

வவுனியா மிஷன் வீட்டைச் சேர்ந்த திரு. அ. மயில்வாகனம் வவுனியா பட்டணத்தில் 63 ம் படத்தில் 104 ம் துண்டில் முடிக்குரிய காணியிலிருந்து 0ஏ. 2று. 05 பேர்ச் நிலத்தை குடியிருக்க குத்தகையாகத் தரும்படி விண்ணப்பித்துள்ளார்.

2. இந்நிலம் விண்ணப்பக்காரனுக்கு வருடாந்த குத்தகைக்கு கொடுபட்டிருக்கிறது. அதில் ஒரு சிறு வீடும், கிணறும் தோண்டப்பட்டிருக்கிறது. இந்நிலம் குடியிருக்க கொடுக்கக் கூடியதாக விருக்கிறது. மற்றும் நிபந்தனைகளோடு பின்வருவனவற்றிற்கும், அமைய, குத்தகையாகக் கொடுக்கும்படி உத்தேசிக்கப்பட்டிருக்கிறது :—

(அ) காலம் : வருடம் ரூபா 25 ;

(ஆ) வாடகை : வருடத்திற்கு ரூபா 13. 5 வருடத்திற்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்படும் ;

(இ) குத்தகையாளர் குத்தகை தொடங்கி இரண்டு வருட காலத்துள் வீடு பட்டண சீர்திருத்த மசோதாவின்கீழ், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருப்திப்படும்படியாக ரூபா 2,500 பெறுமதியான வீட்டைக் கட்டி முடிக்க வேண்டும் ;

(ஈ) குத்தகையாளர் இந்நிலத்தில் குடியிருக்கலாமேயன்றி வேறொன்றுக்கும் பாவிக்கப்படாது.

3. குத்தகை வழங்கத் கூடாதென இத்திகதியிலிருந்து ஆறு கிழமைக்குள் செல்லுபடியான காரணங்கள் எழுத்துமூலம் காட்டினாலன்றி இது வழங்கப்படும்.

வீ. கே. ஆர். அசரப்பா,
காணி அதிகாரிக்காக.

கொழும்பு,
1958 ம் ஆண்டு ஜூலை மீ 17 ந் உ.

---

LJ. 1534/LM.

**1948 ம் ஆண்டின் முடிக்குரிய காணிப்பிரமாணங்களின் 21 (2) ம் பிரமாணத்தின் கீழ் அறிவித்தல்**

இலங்கைப் புத்த சன்பப் பாடசாலைகளின் அதிகாரி குருநாகற் பகுதியிலுள்ள 81 ம் துண்டில் 2 ஏக்கர் 3 பேர்ச் விஸ்தீரணமுள்ள நிலத்தில் ஓர் பள்ளிக்கூடம் கட்ட குத்தகைக்கு வேண்டுமென மனுப்பண்ணியிருக்கிறார்கள் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. இந்நிலம் குத்தகைக்குக் கொடுக்கக் கூடியதாக விருக்கிறது. கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கும் மற்றயவற்றிற்கும் அமைய இத் குத்தகை கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது :—

(அ) காலம் : 30 வருடம் ;

(ஆ) வாடகை : வருடம் ரூபா 14 ;

(இ) குருநாகற் மாவட்ட அரசாங்க அதிபர் திருத்திப்படக் கூடிய முறையில் குத்தகையாளர் குத்தகை தொடங்கி மூன்று மாதங்களுக்குள் இந்நிலத்தில் ஒரு பாடசாலைக் கட்டடம், ஆசிரியர் விடுதி, ஒரு மலசல கூடமும் கட்டி முடிக்க வேண்டும் ;

(ஈ) மேற்காணும் (இ) பகுதியில் கூறப்பட்ட தேவைக்கே இந்நிலம் பாவிக்கப்பட வேண்டும், வேறு ஒன்றுக்கும் பாவிக்கப்படக் கூடாது.

3. செல்லுபடியான காரணங்கள் எழுத்துமூலம் இத்திகதியிலிருந்து ஆறு கிழமைக்குள் காட்டினாலன்றி இக்குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. டபிள்யூ. ஜே. மெண்டிஸ்,
காணி அதிபருக்காக.

கொழும்பு,
1958 ம் ஆண்டு ஜூலைமீ 25 ந் உ.

---

எல் ஜே. 1644.

**1948 ம் ஆண்டின் முடிக்குரிய காணிப்பிரமாணங்களின் 21 (2) ம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

புத்தளம் பரிபாலன டிஸ்திறிக், புத்தளம் பற்று கிறவற்ஸ், புத்தளம் பற்று காரியாதிகாரியின் குறிச்சியில், சிறும்பியடி கிராம விஸ்தீரணமுடைய காணியில் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட பீ. ஒ. பி. பிலானில் அரசாங்கத்தின் தேவைக்காக வடக்கு லொட் 16, 17, 18, கிழக்கு லொட் 19, மேற்கு சொந்தக்காணி, தெற்கு புத்தளம் அனுராதபுர பீ. டபிள்யு. டி. ரோட் என்ற எல்லைக்குள் அடங்கிய காணியில் 2 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியை அதன் பொருட்டு ஒரு பௌத்த ஆலயம்

ஸ்தாபித்தலின் பொருட்டு "சிராம்பியடி எக்சத் பௌத்த சமீதிய" சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாகிய அக்கிராமத்தில் இருக்கும் திருவாளர்கள் பமுனு ஆருச்சிகே ஹென்திரிக் அப்புஹாமி, ஜேன் சிஞ்ஞோ விக்கிரம ஆருச்சியும் ஹென்திறிக் சிஞ்ஞோ ரட்ணயக்க என்பவரால் குத்தகை கேட்டு விண்ணப்பித்திருக்கின்றுர்கள் என்று இத்தால் அறிவித்தல் செய்யப்படுகிறது.

உத்தேசிக்கப்பட்ட ஆலயம் சிராம்பியடி-புத்தளம் எல்லைகளில் உள்ள பௌத்த மதத்தவர்களுக்கு சேவைபுரிய உதவும். குறித்த காணியை இந்த நோக்கத்துக்கக் கொடுக்கக்கூடியதாகவிருக்கிறது. ஏனைய நிபந்தனைகளுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாகக் குறித்த குத்தகையைக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது :—

(அ) வாடகை : வருடமொன்றுக்கு ரூபா 1.

(ஆ) குத்தகை பெறுபவர்கள் குத்தகை தொடங்கிய திகதியிலிருந்து 5 வருட காலத்திற்குள் புத்தளம் மாவட்ட அரசாங்க அதிபர் திருத்திப்படும்படியாக அந்நிலத்தில் ஓர் மதபிரசார மண்டபம் இதன் பின்னுல் ஆவசயாவும் விஹார நிறுவுதல் வேண்டும்.

(இ) குத்தகை பெறுபவர்கள் அந்நிலத்தை ஓர் பௌத்த ஆலயம் ஸ்தாபிக்க உபயோகிக்கலாமேயன்றி வேறெதற்கும் பயன் படுத்தக்கூடாது.

(ஈ) கோவில் கட்டிமுடிந்த 6 மாத காலத்திற்குள் அதே அரசாங்க பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் ஆமோதித்த உறுதிமூலம் அமுல் பணிக்க வேண்டும். அப்படிச் செய்யுங்கால அந்நிலத்தை நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கோ அல்லது கோவிலை நடத்தும் விஹாராதிபதிக்கோ எற்றபடி, 99 வருட காலத்திற்கு குத்தகையாகக் கொடுக்கப்படும்.

3. ஆறு கிழமைக்குள் செல்லுபடியான காரணங்கள் எனக்கு எழுத்துமூலம் காட்டினுலன்றி இது வழங்கப்படும்.

டபிள்யு. டபிள்யு. ஜே. மென்டிஸ்,
காணி அதிகாரிக்காக.

கொழும்பு,
1958 ம் ஆண்டு ஜுலை 21 ந உ.

---

**1948 ம் ஆண்டின் முடிக்குரிய காணிப்பிரமாணங்களின் 21 (2) ம் பிரமாணத்தின் கீழ் அறிவித்தல்**

மிகிந்தலையில் உள்ள நாகூர் சம்சுடீன் என்பவர் அநுராதபுர மாவட்டத்தைச்சேர்ந்த கிழக்கு நுவரகம் பலாத்தாவில் உள்ளதும் 564 ம் இலக்கம் கொண்ட இறுதி கிராமப்படத்தில் 56′ × 20′ விஸ்தீரணமுள்ள நிலத்தை குடியிருக்கவும் அதில் வியாபாரம் செய்யவும் குத்தகையாகத் தரும்படி விண்ணப்பித்திருக்கிறுர் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. வருடாந்த தெருவுக்கு ஒதுக்குக் காணி உத்தரவுப் பத்திரத்தின் பேரில் இவர் இக்காணியில் குடியிருக்கிறுர். இதில் 50 வருடமாகக் கட்டப்பட்ட கட்டிடம் இருக்கிறது. இதன் பெறுமதி ரூபா 3,500 மேற்கூறப்பட்ட தேவைக்கு இக்காணி கொடுக்கக் கூடியதாக விருக்கிறது. பின்வரும் நிபந்தனைகளுடன் விண்ணப்பத்தை அங்கீகரிக்க உத்தேசிக்கப்படுகிறது :—

(அ) காலம் : 5 வருடம். ஒவ்வொரு 5 வருடமும் அநுராதபுரி மாவட்ட அரசாங்க அதிபரின் உத்தரவின் பேரில் புதுப்பிக்க வேண்டும் ;

(ஆ) வாடகை : வருடமொன்றுக்கு ரூபா 4.22. குத்தகை புதுப்பிக்கும் பொருட்டு இதுவும் புதுப்பிக்கப்படும் ;

(இ) குத்தகைக்காரர் நிலத்தை குடியிருக்கவும் வியாபாரம் செய்யவும் மட்டும் பாவிக்கலாமேயன்றி வேறு ஒன்றுக்கும் பாவிக்கப் படாது.

3. குத்தகை வழங்கக் கூடாதென இத்திகதியிலிருந்து ஆறு கிழமைக்குள் செல்லுபடியான காரணங்கள் எழுத்துமூலம் காட்டினுலன்றி இது வழங்கப்படும்.

வி. கே. ஆர். அசரப்பா,
காணி அதிகாரிக்காக.

கொழும்பு,
1958 ம் ஆண்டு ஜுலை மீ 17 ந உ.

---

## அனுராதபுரம் புது நகரில் வியாபாரம் நடத்துவதற்குக் காணி குத்தகைக்குக் கொடுத்தல்

அனுராதபுர மாவட்ட அரசாங்க அதிபரால் கீழே விபரிக்கப்பட்ட பகுதியில் இருந்து 32 காணித் துண்டுகள் வியாபாரம் நடத்தும் பொருட்டுக் குத்தகைக்குக் கொடுப்பதற்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுமென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

வியாபாரப் பகுதி இல. 1.

இந்தப் பகுதி கீழ்வரும் எல்லைகளுக்குள் அடங்கியது :—

வடக்கு : டிக்ஸென் தெரு; கிழக்கு : நுவரவெவக் குளத்தின் அணைக் கட்டு ; தெற்கு : வான்எல வாய்க்கால் ; மேற்கு : புகையிரத ஸ்தானத்திற்குச் செல்லும் தெருவும் டிக்ஸென் தெருவும் சந்திக்குமிடத்திலிருந்து இலங்கை வங்கிக்குச் செல்லும் புதிய தெரு. கீழே காட்டிய அளவுகளைக் கொண்ட 32 காணித்துண்டுகள் இந்தப் பாகத்தில் உள. அவை 12 காணித்துண்டுகள் ஒவ்வொன்றும் 15 அடி அகலமும் 40 அடி நீளமும் கொண்டது, 20 காணித்துண்டுகள் ஒவ்வொன்றும் 15 அடி அகலமும் 70 அடி நீளமும் கொண்டது.

2. குத்தகையாளரைத் தெரிவு செய்யும் பொழுது கீழ்க்காணும் ஒழுங்கின்படி முக்கியத்துவம் கொடுக்கப்படும் :—

(அ) அனுராதபுரம் பழைய நகர்ப் பாதுகாப்புத் திட்டத்துக்காக அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்ட வியாபாரம் நடத்தப் பாவிக்கப்பட்ட காணிகளின் சொந்தக்காரர் அல்லது குத்தகைக் காரரும் பழைய நகரில் இடிக்கப்பட்டுள்ள வியாபாரத்துக்குப் பாவிக்கப்பட்ட கட்டிடங்களின் குத்தகைக்காரர் ;

(ஆ) புதிய நகரம் விருத்தியடைவதற்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட புதிய நகரின் முதலாம் பகுதியிலுள்ள வியாபாரத்துக்குப் பாவிக்கப்பட்ட காணிகளின் சொந்தக்காரர்;

(இ) பழைய நகர்ப் பாதுகாப்புத் திட்டத்துக்கு அரசாங்கத்தால் எடுக்கப்படுமென்று அறிவித்தல் கொடுக்கப்பட்ட காணிகளின் சொந்தக்காரர் இவர்கள் காணி எடுப்பதற்கு அறிவித்தல் கொடுத்த திகதியிலிருந்து முன்னே தொடர்ச்சியாக 5 வருட காலத்துக்குச் சொந்தக்காரராக இருந்திருக்க வேண்டும்;

(ஈ) பழைய நகரிலுள்ள வியாபாரத்துக்குப் பாவிக்கப்பட்ட காணிகளின் சொந்தக்காரர். இவர்கள் தங்களுடைய காணி எடுத்துக் கொள்ளப்படுமென்ற அறிவித்தல் கொடுத்த திகதியிலிருந்து முன்னே தொடர்ச்சியாக 5 வருட காலத்துக்குச் சொந்தக்காரராக இருந்திருக்க வேண்டும்;

(உ) பழைய நகர்ப் பாதுகாப்புத் திட்டத்துக்காக அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுள்ள வியாபாரத்துக்குப் பாவிக்கப்பட்ட காணிகளை விட ஏனைய காணிகளின் சொந்தக்காரரும் அல்லது குத்தகைக் காரரும் அல்லது பழைய நகர்ப் பாதுகாப்புத் திட்டத்துக்காக இடிக்கப்பட்ட கட்டிடங்களின் வாடகைக்காரர்;

(ஊ) பழைய நகர்ப் பாதுகாப்புத் திட்டத்துக்காகக் காணி எடுத்துக் கொள்ளப்படுமென்ற அறிவித்தல் கிடைக்கப்பட்டுள்ள வியாபாரத்துக்குப் பாவிக்கப்பட்ட காணிகளைவிட ஏனைய காணிகளின் சொந்தக்காரர், இவர்கள் காணி எடுப்பதற்கு அறிவித்தல் கொடுத்த திகதியிலிருந்து முன்னே தொடர்ச்சியாக 5 வருட காலத்துக்குச் சொந்தக்காரராக இருந்திருத்தல் வேண்டும்;

(எ) பழைய நகரில் வியாபாரத்துக்குப் பாவிக்கப்பட்ட காணிகளைவிட ஏனைய காணிகளின் சொந்தக்காரர், இவர்கள் காணி எடுப்பதற்கு அறிவித்தல் கொடுத்த திகதியிலிருந்து முன்னே தொடர்ச்சியாக 5 வருட காலத்துக்குச் சொந்தக்காரராக இருந்திருத்தல் வேண்டும்.

(ஏ) புதிய நகரின் அபிவிருத்திக்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முதலாம் இரண்டாம் பகுதிகளிலுள்ள காணிகளின் சொந்தக் காரர்;

(ஐ) புதிய நகரின் அபிவிருத்திக்கு புதியநகர் முதலாம் இரண்டாம் பகுதிகளிலுள்ள காணிகள் எடுப்பதற்கு அறிவித்தல் கிடைக்கப் பட்ட காணிகளின் சொந்தக்காரர் அறிவித்தல் கொடுத்த திகதியிலிருந்து முன்னே தொடர்ச்சியாக 5 வருட காலத்துக்கு சொந்தக்காரராக இருந்திருத்தல் வேண்டும்;

(ஒ) பழைய நகரில் சொந்தமாகக் காணியில்லாதவர்கள், ஆனால் நிரந்தரமாக இருப்பதற்குப் பழைய நகரில் இருப்பிடம் உள்ளவர்கள்.

மேற்கூறிய பகுதி விண்ணப்பக்காரரிடமிருந்து கிடைத்த விண்ணப்பங்கள் அனுமதித்த பின்பு காணித் துண்டுகள் இருக்குமாயின் மற்றும் ஏனையோருடைய விண்ணப்பங்களும் ஆலோசனைகு எடுக்கப்படும்.

**குறிப்பு.**—பழைய நகர்ப் பாதுகாப்புத் திட்டத்துக்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுள்ள வியாபாரத்துக்குப் பாவிக்கப்பட்ட காணியின் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரர் அல்லது குடியிருப்பவர் அல்லது காணி எடுக்கப்படுமென்று அறிவித்தல் கிடைத்தவரும் புது நகரில் அரசாங்கத்தால் கட்டப்பட்ட கடையொன்று வழங்கப்பட்டவர் இந்த அறிவித்தலின் கீழ் கொடுக்கவிருக்கும் காணித்துண்டைப் பெறுவதற்குத் தகுதியுடையவராக இருக்க வேண்டுமாயின் காணி கொடுக்கப்பட்டவுடன் அதில் கட்டிடம் நிறுவி முன்னே அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட கடையில் நின்று வெளியேறுவதற்கு உடன்படவேண்டும்.

3. குத்தகைக்கு விண்ணப்பங்கள் அனுராதபுர மாவட்ட அரசாங்க அதிபரென்ற விலாசத்துக்கு 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 14 ந்

திகதி முற்பகல் 10 மணிக்குமுன் கிடைக்க வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் கீழேயுள்ள விபரங்களைக் கொண்டதாக இருக்கவேண்டும்:

(அ) விண்ணப்பக்காரருக்கு சொந்தமான அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவிருக்கும் வியாபாரத்துக்குப் பாவிக்கப்பட்ட காணிகளின் அல்லது ஏனைய காணிகளின் முழு விபரங்கள்;

(ஆ) விண்ணப்பக்காரர் விரும்பிக் குத்தகைக்கு எடுக்க விருக்கும் காணியின் விசாலம்.

4. தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் மற்றும் நிபந்தனைகளுடன் பின்வரும் நிபந்தனைகளடங்கிய குத்தகைக்கு இணங்கல் வேண்டும் :—

(அ) குத்தகையின் காலம் 99 வருடம்;

(ஆ) குத்தகைக்காரர் திருத்தப்படாத காணியின் பெறுமதியில் 4 வீதப்படி வருடக் குத்தகைப் பணம் கட்டவேண்டும்;

(இ) குத்தகைக்காரர் தன்னுடைய செலவில் குத்தகை தொடங்கிய திகதியிலிருந்து 2 வருட காலத்துக்குள் நாட்டு நகர நிர்மாணப் பகுதி அதிபரால் அங்கீகரிக்கப்பட்ட படங்களின்படி காணியில் கட்டிடம் நிறுவுதல் வேண்டும்;

(ஈ) குத்தகை தொடங்கிய ஒரு வருட காலத்துக்குள் குத்தகைக்காரர் காணியில் கட்டிட வேலைகள் ஆரம்பிக்க வேண்டும்;

(உ) குத்தகைக்காரர் காணியை வியாபாரப் பாவிப்புக்கொழிய வேறு எதன் பொருட்டும் பாவிக்கப்படாது.

5. குத்தகையாளரைத் தெரிவு செய்வதற்கு அனுராதபுரக் கச்சேரியில் 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 21 ந் திகதி முற்பகல் 10 மணிக்குக் காணிக் கச்சேரி வைக்கப்படும். எல்லா விண்ணப்பக்காரரும் காணிக் கச்சேரிக்குத் தாமாகவோ அல்லது எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ சமூகமளிக்க வேண்டும்.

6. காணித் துண்டுகளின் குறிப்பிடத்தைப் பற்றியோ அல்லது வேறெந்த விபரங்களோ அநுராதபுர மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டீ. சி. எல். அமரசிங்கி,
அனுராதபுர மாவட்ட அரசாங்க அதிபர்.

அனுராதபுரக் கச்சேரி,
1958 ம் ஞு ஜூலைமீ 12 ந் உ.

---

LS. 3629 LK.

**1948 ம் ஆண்டின் முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ம் பிரமாணத்தின் கீழ் அறிவித்தல்**

ஈஸ்ரேண் புறொடியூஸ் எஸ்ரேற் கொம்பனி லிமிட்டெட் என்பவர்கள் வதுளை டிஸ்திறிக் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த கன்றுக்கற கோறளையில் டிகாறெம்பே என்னும் கிராமத்திலுள்ளதும் 256 ம் இலக்க முடிவான கிராமத்திட்டப் படத்தில் 153 ம், 153½ ம், 153⅓ ம், 154 ம் இலக்க காணித்துண்டுமாகிய முடிக்குரிய காணியிலிருந்து ஏறக்குறைய 11 ஏக்கர் நிலத்தை, றப்பர் நாட்டும் பொருட்டு, குத்தகையாகத் தரும்படி விண்ணப்பித்துள்ளார்கள்.

2. இந்த நோக்கத்திற்கு வேண்டிய நிலம் கொடுக்கக் கூடியதாகவிருக்கிறது. குறித்த விண்ணப்பத்தை, மற்றும் நிபந்தனைகளோடு பின்வருவனவற்றிற்கும் அமைய வழங்குவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது :—

(அ) காலம் : 30 வருடம் ;

(ஆ) வாடகை : வருடம் ரூபா 60.

3. குறித்த நிலம் இதற்கு முன்பாக குத்தகைக்கு இக் கொம்பனிக்குக் கொடுக்கப்பட்டது. குத்தகை 27.11.55 ல் முடிவாயிற்று. நிலத்தில் றப்பர் நடப்பட்டிருக்கிறது. பயிர் 40 வயதுள்ளது. ஒரு பகுதியில் ஒரு வருடத்திற்கு முன் றப்பர் நாட்டப்பட்டிருக்கிறது. குத்தகையைப் புதுப்பிப்பதற்கே விண்ணப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

4. குத்தகை வழங்கக் கூடாதென இத்திகதியிலிருந்து ஆறு கிழமைக்குள் செல்லுபடியான காரணங்கள் எழுத்து மூலம் காட்டினாலன்றி இது வழங்கப்படும்.

டபிள்யூ. டபிள்யூ. ஜே. மென்டிஸ்,
கொழும்பு, காணி அதிகாரிக்காக.
1958 ம் ஆண்டு ஜூலைமீ 16 ந் உ.

---

எல்ஜே. 1299.

**1948 ம் ஆண்டின் முடிக்குரிய காணிப்பிரமாணங்களின் 21 (2) ம் பிரமாணத்தின் கீழ் அறிவித்தல்**

வெல்லம்பிட்டிய, "முனிசிறிபா வென்தனு ஜனோபகார சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாகிய திருவாளர்கள் சிறில் விக்கிரமகாராலு ஆராச்சி, எச். தர்மதாச, யூ. யூ. பொடி அப்புகாமி, எம். ஆர். பெர்னாண்டோ, எல். சீ. பெர்னாண்டோ, ஆர். ஏ. எமிஸ் சிங்கோ என்பவர்கள் ஸ்ரீபாடஸ்ரானவுக்குப் போகும் மார்க்கத்தில் அமைந்துள்ள முடிக்குரிய காணித்துண்டில் 60 அடி நீளம் 20 அடி அகலமுள்ள ஒரு காணித்துண்டை "தன்ஸால" கட்டுவதற்குச் குத்தகையாகக் தரும்படி விண்ணப்பித்திருக்கிறார்களென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. இந்த நோக்கத்திற்கு வேண்டிய நிலம் கொடுக்கக் கூடியதாகவிருக்கிறது. குறித்த விண்ணப்பத்தை மற்றும் நிபந்தனைகளோடு பின்வருவனவற்றிற்கும் அமைய வழங்குவதாக உத்தேசிக்கப்பட்டிருகிறது.

(அ) காலம் : 99 வருடம் ;

(ஆ) வாடகை : 50 சதம் ;

(இ) குத்தகை பெறுபவர்கள் இக்குத்தகை தொடங்கிய திகதியில் இருந்து இரண்டு வருடத்திற்குள், இரத்தினபுரி மாவட்ட அரசாங்க அதிபர் திருப்திப்படும்படியாக அந்நிலத்தில் ஒரு "தன்ஸால" நிறுவுதல் வேண்டும் ;

(ஈ) குத்தகை எடுப்பவர்கள் அந்நிலத்தை ஒரு தன்ஸால ஸ்தாபிக்க உபயோகிக்கலாமேயன்றி வேறு எதற்கும் பயன்படுத்தக் கூடாது.

3. குத்தகை வழங்கக் கூடாதென இத்திகதியிலிருந்து ஆறு கிழமைக்குள் செல்லுபடியான காரணங்கள் எழுத்து மூலம் காட்டினாலன்றி இது வழங்கப்படும்.

டபிள்யூ. டபிள்யூ. ஜே. மென்டிஸ்,
கொழும்பு, காணி அதிபருக்காக.
1958 ம் ஞு ஜூலைமீ 18 ந் உ.

---

எல்ஜே. 1042.

## திருத்தம்

1958 ம் ஆண்டு வைகாசி மாதம், 23 ம் திகதி 11,318 ம் இலக்க இலங்கை அரசாங்க "கெசெற்" பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் முதலாம் பாகம் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கவேண்டும்.

பெயர் "பற்றிய கே நண்டிசேன குணசிங்க" வை மாற்றி "பற்றியாகே நண்டிசேன குணசிங்க" என்று இருக்கவேண்டும்.

டபிள்யூ. டபிள்யூ. ஜே. மென்டிஸ்,
கொழும்பு, காணி அதிபருக்காக.
1958 ம் ஞு ஆடி மீ 16 ந் உ.

---

## விளம்பரம்

**1958 ம் ஆண்டு ஆடி (ஜூலை) மாதம் 29 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக விருப்பதால், 1958 ம் ஆண்டு ஆவணி (ஓகஸ்ற்) மாதம் 1 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1958 ம் ஆண்டு ஆடி (ஜூலை) மாதம் 28 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.**

பெர்னார்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1958 ம் ஞு (ஜூலை) ஆடி மீ 17 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.